# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE & MANAGEMENT
# FIRST EXAMINATION IN DIPLOMA IN BUSINESS ADMINISTRATION – 1999/2000
# (EXTERNAL DIPLOMA PROGRAMME) NOV - 2003

## DBA 1023 Contemporary Management

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம்: 03 மணித்தியாலங்கள்

---

01) "நிறுவன குறிக்கோளினை அடையுமுகமாக வரையறுக்கப்பட்ட மனித, பௌதீக, வளங்களை வினைத்தறனாகவும், வினைநிறைவேற்றமாகவும் திட்டமிட்டு, ஒழுங்குபடுத்தி, வழிநடத்தி கட்டுப்படுத்தும் செய்முறை முகாமைத்துவமாகும். எனினும், இன்றைய வியாபார சூழலில் நிறுவனங்களை முகாமை செய்வதில் முகாமையாளர்கள் பல சவால்களை எதிர்நோக்குகின்றனர்."

அ) வினைத்திறன், வினைநிறைவேற்றம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை சுருக்கமாக விளக்குக?

(06 புள்ளிகள்)

ஆ) பொருத்தமான உதாரணங்களுடன் இன்றைய வியாபார சூழலில் முகாமையாளர்கள் எதிர்நோக்கும் சவால்களை விபரிக்குக?

(10 புள்ளிகள்)

இ) முகாமைத்துவத்தின் பிரதான அடிப்படை எண்ணக் கருக்கள் யாவை?

(04 புள்ளிகள்)

02) "வினைத்திறனற்ற எழுத்துமூல, வாய்மொழி மூல தொடர்பாடல்கள் அர்த்தமற்றவை. எனவே வியாபார தொடர்பு கொள்வோர் தெளிவான தகவல்களையும், தொடர்பாடல் சாதனங்களையும் தெரிவு செய்வதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்."

அ) ஒரு வினைத்திறனான தொடர்பாடலில் காணப்படும் நிபந்தனைகளை பட்டியலிடுக.

(04 புள்ளிகள்)

ஆ) பொருத்தமான தொடர்பாடல் சாதனம் ஒன்றை தெரிவு செய்யும் முன் கருத்தில் கொள்ளவேண்டிய காரணிகள் யாவை? விபரிக்குக.

(06 புள்ளிகள்)

இ) வாய்மொழி மூல தொடர்பாடலுக்குப் பதிலாக எழுத்துமூல தொடர்பாடலை பயன்படுத்துவதிலுள்ள நன்மைகளை ஒப்பிடுக.

(10 புள்ளிகள்)

LIBRA... Eastern University

03) “நிறுவனத்தின் ஊழியர்களை எவ்வாறு தூண்டுதல் என்பதனை அறிந்து கொள்வதை இன்றைய முகாமையாளரது பிரதான கடமையாகும்.”

அ) ஒரு நிறுவனத்தில் தேவை, திருப்தி, தூண்டல், செயற்பாடு என்பவற்றுக்கிடையிலான தொடர்பை விபரிக்குக.

(06 புள்ளிகள்)

ஆ) McGregorஇன் கோட்பாடு X, Y என்பவற்றின் கண்டுபிடிப்பு எவ்வாறு நிறுவனம் ஒன்றின் நபர்களை வழிநடத்த பிரயோகிக்கலாம்?

(08 புள்ளிகள்)

இ) Maslowவின் தேவைக் கோட்பாட்டை Herzbergஇன் இரு காரணிக் கோட்பாட்டோடு ஒப்பிடுக.

(06 புள்ளிகள்)

04) “தலைமைத்துவ செயல்களை நடைமுறையில் கையாளும்போது ஒருவர் வெளிப்படுத்தும் நடத்தைப்பாங்கே ஒருவரின் தலைமைத்துவப் பாணி தலைமைத்துவத்தில் நடத்தை அணுகுமுறை கூறுகின்றது.”

அ) நிறுவனங்களில் மக்களை வழிநடத்துவதில் உள்ளடங்கும் முக்கிய நடவடிக்கைகள் யாவை?

(04 புள்ளிகள்)

ஆ) தீர்மானித்தல், ஊக்குவித்தல், தொடர்பாடல் சம்பந்தமாக அதிகாரியை மையமாகக் கொண்ட தலைமைத்துவ நடவடிக்கைகள் எவ்வாறு கீழமைந்த ஊழியரை மையமாகக் கொண்ட தலைமைத்துவ நடவடிக்கைகளிலிருந்து வேறுபடுகின்றதெனக் கூறுக.

(06 புள்ளிகள்)

இ) “எல்லாத் தலைவர்களும் முகாமையாளரல்லர். மேலும் எல்லா முகாமையாளரும் தலைவர்களாகமாட்டர்கள்.” இந்தக் கூற்றை உதாரணத்துடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

05) “தனி முயற்சியாளரது குணாம்சங்கள் ஒரு நிறுவனத்தின் வெற்றி, தோல்விகளை தீர்மானிக்கின்றது.”

அ) தனிப்பட்ட முயற்சியாளரது குணாம்சங்களை (PECS) பட்டியலிடுக.

(04 புள்ளிகள்)

ஆ) ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு சிறு வியாபாரத்தின் பங்களிப்பு யாது? விளக்குக.

(05 புள்ளிகள்)

இ) இலங்கையில் சிறு வியாபாரத்தின் தோல்விக்கான பிரதான காரணங்கள் யாவை?

(05 புள்ளிகள்)

ஈ) "SWOT" பகுப்பாய்வினை விளக்குக.

(06 புள்ளிகள்)